**Subscription**

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*
The Manager,
'Morning Star', Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QJ/J/29/News/85*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 146 JAFFNA, FRIDAY, 2nd MAY, 1986 No. 18

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**UNDELIVERED ISSUES**

Please re-address all undelivered issues of the **Morning Star** to:-
**The Manager,**
"Morning Star",
Vaddukoddai.

EVELYN INSTITUTE JAFFNA
161
LIBRARY
REFERENCE
9/5/86

*We give below a more or less a literary translation of the Editorial that appeared in "EELA- MURASU" of 25-4-86.*

## Government officers should identify themselves with the people

A group of high powered Government officials along with the Citizens Committee Members paid a visit to the destroyed temple of Selvasannathi two days ago

A senior member of the Government representatives said that it reminded him of looking at a cemetery.

The sight which met the eyes of the visitors consisted of exploded and unexploded foreign cartridges, bullets burnt and damaged buildings scattered tiles, skulls within the court yard and skeletons.

In this famous temple they saw something which closely resembled a target on a battle field during war time.

A temple car 45 feet in height which three years ago had cost four million rupees to make was simply a heap of ashes

The fire which burnt this car seems to have been caused by a bomb dropped from above through what is now a large opening in the pinnacle of the shed that houses the car.

It is therefore obvious the fire was caused from above. The temple that had earned its fame not merely through its sacred spots but through its muts is now nothing more than a cre matorium.

The rites in the temple are unlike most of those performed in other Hindu temples As at Kadirgamam the officiating priests bandaged their lips and recited sacred formulas in silence.

The ceremonies on Fridays are considered more sacred than on other days.

These things were explained to Brigadier Rupasinghe when he went there yesterday.

The chief members of the group that visited the temple two days ago were besides Brigadier Rupasinghe G. A., A. G. A., Prof K Sivathamby and Mr. Balasubramaniam

To recommend the next step to be taken in the matter an action committee has been set up.

The two issues that arise on the present situation are:-

(i) Should the normal rites of the temple be commenced once again after necessary purificatory ceremonies have been gone through.

(ii) Should the normal rites of the temple commence only after the army camp at Thondamanaru has been shifted from its present site.

It is the opinion of many that the army camp at Thondamanaru must be removed from its present site. It is also the wish of many people that no rite whatever, should be carried on till this happens.

In this matter it is necessary that the authorities should heed the opinions and wishes of the pubilic so that a just and permanent settlement is reached.

JAFFNA COLLEGE
TECHNICAL INSTITUTE
VADDUKODDAI

New academic year 86/87.
Commences on 2nd June 1986.

**Technician Diploma Courses conducted in English medium**

Electronics — 3 years
Electrical - Power, — Mechanical & Quantity Surveying — 2 years.
Computer Programming — 1 year.

**Technician Certificate Course (1 year) conducted in Tamil medium.**

Turners & Fitters. Welders, Foundry-men & Electrical Installation.

Closing date 12-5-1986.
For details and application form (Rs. 5/-) contact Director, Jaffna College Technical Institute, Vaddukoddai.

*An Appreciation*

### Mrs. S. T. Aiyathurai

The death of Mrs. Grace Jeyamany Aiyathurai, the wife of the late Dr. S. T. Aiyathurai and the daughter of the late Rev. and Mrs. Richards of the Anglican Church, occurred in Singapore on 26-3-86, while residing with her children Dr. Eric Aiyathurai and Mrs. Ranee Supramaniam for a period of one year. She was in failing health for some time.

She loved her home at 16, Somasundram Avenue, her home land Sri Lanka and desired to come back but that was not to be. It was unfortunate, at the same time it was Gad's provision and abundant blessing to have been with two of her children at the time of her demise. While in Sri Lanka, she had been cared for by her other children Sheila Thambiah, Aileen Appadurai and Rita Ponnampalam after her husband's death, Aileen left for Canada in 1984 after the riots, and Rita for Zambia about ten years back. All the children have the satisfaction that they were around her during her birthday time last June and even earlier in Sri Lanka before she left for Singapore.

The traits which characterised her life and had a great appeal were her joy, her laughter, her jokes, her zest in life, her concern and help for those in need and her songs from memory which she would not hesitate to sing quite loudly not only in Church, but also in parties and even in trains.

She was the oldest member of the Y. W. C. A. an ardent supporter of her Alma Mater (C. G. C.), an active member of the Old Girls' Association, and a supporter of all Social Service movements. Her absence would be missed any-where.

She was an interesting conversationalist and would give and take for any length of time. She enjoyed seeing people married and would quietly whisper to the couple when wishing "Next year you must be blessed with a boy".

She would enjoy all the good things of life like a small child, ice-cream, ecclairs, chocolates etc. but being conscious of her weight and heavy body would ask after eating some of the above, "Have I put on?"

Her home at Som. Ave. was open to everyone. With her good eye-sight, she would sometimes call out to those going on the lane to come and have a chat. She was careful to note good things in others and bestow compliments. She took care to visit her neighbours, especially the sick and elderly even in her own weak state. Just before she left for Singapore, she helped an old lady to get a cataract operation done and even bought for her, her lenses. She helped many others in need. This was one reason many rallied round her spontaneously on her birthdays bringing even gifts. The emphasis of course was on a prayer-meeting she arranged with her Pastor to thank the Lord for past mercies and ask for future guidance.

The greatest thing in her life was this faith which she inherited from her parents. She would attend as many prayer-meetings as she could. On Sunday without fail, even with weakening health, and swollen legs, she would get up at five, dress slowly, walk to church and kneel at the altar for communion.

She was stringent with money matters as she felt hard-earned money should not be wasted. Where there was a real need, she wouldn't hesitate to give. Her systematic habits of having things in their places was a hard fact everybody had to cope up with.

She loved travelling and would persuade her sons-in-law with such nicety that no one had the heart to refuse. Her mother too was such. All loved them for their kindness.

I remember the incident when our late youngest brother Reggie rose to receive his award at the Convocation at the Peradeniya University, for securing First Class Honours for his Bachelor's Degree in Agriculture, which no one had got for fourteen years previously. Mrs. Richards, her mother stood up, clapping vigorously unmindful of the elite crowd round her, remarking to everyone, "He is my grandson".

Mrs. Aiyathurai befriended all, Hindus and Christians and was concerned in each one's welfare. That is why her loss is felt deeply by all. Everyone feels a big landmark is gone.

A memorial service held in her home on 5-4-86 by the Ariyaratnams residing in her house, with Rev. J. Sarvananthan and Pastor Earle Richards, was very fitting. Mr. K. Nesiah and Mrs. Thavamany Joseph of the Mothers' Union of St. John's Churce gave the tributes.

*(Continued on page 4)*

JAFFNA COLLEGE
**Wanted**

1. A resident lady teacher with experience and achievements in all branches of sports for girls such as athletics, netball, badminton and tennis. Minimum qualifications G. C. E. O/L.
2. Library Assistant (Resident) willing to be trained in Library Science. should have above average proficiency in English with a keen interest in books and libraries. Minimum qualifications four passes in the G. C. E. A/L examination.

Apply on forms available in the college office on or before 31st May, 1986.

Jaffna College, Vaddukoddai. **Principal.**

**Applications are called for Male Nurse traineess.**

*Qualifications required*

1. G. C. E (O/L) in not more than two sittings with 5 subjects in one sitting includ. ing 4 credits (Tamil Language or Literature and Arithmatic or Pure Maths or Commercial Arithmatic.)
2. N. C. G. E 6 subjects in not more than two sittings including 4 "B" grade passes with first Language and Arithmatic.

Applications are to be addressed to the Acting Medical Superintendent, Green Memorial Hospital, Manipay. Closing date 15. 5. 86.

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 146 ] 2-5-86 [ இதழ் 18


## இலங்கைத் தமிழர் பிரச்னை

[ சென்னையிலிருந்து வெளிவரும் ஜுனியர் விகடனில் டாக்டர் எம். எஸ் உதயமூர்த்தி எழுதிய இக்கட்டுரையை 'ஈழநாடு' தந்துதவியது. இதன் சுருக்கத்தை நமது வாசகர்களின் சிந்தனைக்காக இங்கு தருகிறோம். — ( ஆ. ர் ). ]

"தமிழர்கள் பிரச்னைக்கு ராணுவ மூலம் முடிவு கட்டுவோம்" என்று உள்நாட்டிலும், "அரசியல், ராணுவம் என்ற இரண்டையும் உபயோகிப்போம்" என்று வெளிநாட்டிலும் பேசுகிறார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

தமிழர்கள் பெரும்பான்மையோராய் இருந்த திரிகோணமலையில், தமிழர்களைக் கொன்று குவிப்பதன் மூலம் இந்த நிலையை மாற்றிவிட்டார் ஜெயவர்த்தன இதற்கு உடந்தையாக, இஸ்ரவேல் நாட்டு யூதர்கள், யூத ராணுவ ஆலோசகர்கள், பாகிஸ்தான் நாட்டு ராணுவம், விமானிகள் உதவி வருகின்றனர்.

இஸ்ரவேலும் பாகிஸ்தானும் ஜன்மப்பகை கொண்ட நாடுகள், இவர்களுக்கு ஆசி வழங்கி, தொடர்ந்து பணமும் ஆயுதமும் அளித்து இவர்களை ஒன்றாகச் சேர்த்தது அமெரிக்கா. ஏன்? அதற்கு நிரந்தரமான கப்பற் படைத் தளமாக திரிகோணமலை இருந்தால் நல்லது என்பதே. இதைக் கொடுத்தால் இலங்கையின் உள்நாட்டு அரசியலுக்கு உதவியாயிருக்குமென ஜெயவர்த்தன எண்ணுகிறார்.

இதன் காரணமாக, மனித உரிமைகளை மதியாத ஜெயவர்த்தனாக்களைப் பாராட்டுகிறது அமெரிக்கா, உரிமைக்காக, உயிர்ப் போராட்டம் நடத்தும் தமிழர்களை வன்முறையாளர்கள் என்று வர்ணிக்கிறது அமெரிக்கா. இலங்கையில் நடக்கும் இனப்படுகொலைக்கு இஸ்ரேலையும், பாகிஸ்தானையும் தூண்டி விடுகிறது, இங்கிலாந்து பிரதமர் மார்க்கரட் தட்சரும், "தமிழர்கள் கொலைகாரர்கள்" என்றுதான் பேசுகிறார்.

இத்தனை கொடுமைகள் இலங்கைத் தமிழர்களுக்கு நடைபெற்றும், இதனை இந்திய அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கிறது, "இது அயல் நாட்டுப் பிரச்னை" என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டிருக்கிறது. தன்னை அங்கீகரிக்கவில்லை என்ற காரணத்தை மனதில் வைத்துக் கொண்டு இஸ்ரேல் இந்தியாவுக்கு எதிராக இலங்கையில் செயல்படுகிறது. அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றால், அவர்கள் போராளிகளுக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என்பது இஸ்ரேலியரின் ஆலோசனை. லெபனானிலும் மற்ற இடங்களிலும் இப்படித்தான் மனிதத் தன்மையின்றி இஸ்ரேலியர் செயல்படுகிறார்கள். அநியாயத்திற்கு உடந்தையாயிருக்கிறார்கள்.

கடந்த 30 ஆண்டுகளில் பாகிஸ்தான் இந்தியா மீது மூன்று முறை போர் தொடுத்தது. ஒவ்வொரு முறையும் அமெரிக்க ஆயுதங்களுடன் இந்தியா மீது போர் தொடுத்த பாகிஸ்தான் இன்று யாரைக் கருத்தில் கொண்டு அணுக்குண்டு தயாரிக்கிறது? நாளைக்கு ஒரு பிரச்னை எழுந்தால், அணுக் குண்டை இந்தியாவின் தலையில் போடமாட்டார்களா? பஞ்சாபைப் பிரிக்க வகை செய்ய மாட்டார்களா? பாகிஸ்தான் சாதுரியமாகத் தனது அணுக் குண்டு தளவாடங்களைப் பத்திரப் படுத்திக் கொண்டு, "நாம் அதை அளிக்கமாட்டோம்!" என்ற உடன்பாட்டை இந்தியாவுடன் தந்திரமாய்ப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

மேற்கே பாகிஸ்தான், வடக்கே சீனா, தெற்கே இலங்கை, அதே இலங்கையின் திரிகோணமலையில் அமெரிக்க கடற்படை! இந்தியா இதனைக் கண்டும் உணராதிருப்பது நல்லதல்ல. — பாகிஸ்தானில் அணுக்குண்டு தளத்தை அனுமதிப்பதும், திரிகோணமலையில் அமெரிக்க கப்பற்படைக்கு இடம் தருவதும் இந்தியாவின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

1983 இல் கொழும்பில் தமிழர் படுகொலை செய்யப்பட்ட போது, இந்திராகாந்தி இந்தியக் கப்பலை அனுப்பினார் அகதிகளை அப்புறப்படுத்த, ஜெயவர்த்தன "இது எங்கள் விஷயம், எங்கள் ராணுவம் செய்யும்" என்று தடுக்க முயன்றார். இந்திரா காந்தியின் நிர்ப்பந்தத்தினால், என்ன நேருமோ என்று அச்சங் கொண்ட ஜெயவர்த்தன அதனை ஏற்றுக் கொண்டார். ஆனால் இன்று என்ன நடக்கிறது? யார் யாரை மிரட்டுகிறார்கள்? "எது அயல் நாட்டு உரிமை, எது இனப் படுகொலை" என்பதற்கு வித்தியாசம் தெரிந்தது இந்திரா காந்திக்கு. இராஜீவ் காந்திக்கு வெளிவிவகார ஞானம் போதாதே என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

இலங்கைப் பிரச்சனையில் ராஜீவின் அணுகுமுறையைக் கவனிக்கும்போது, "ஏதோ இது ஒரு லாப நட்டப் பிரச்சனை!" என்று, மூன்றாம் மனிதர் போல பார்க்கும் போக்கு தென்படுகிறது. இதிலுள்ள உயிர்ப் போராட்டத்தின் காரணத்தையும், இதன் விளைவாகத் தென்னகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அவர் கணித்திருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்களின் உணர்வையும் நியாயத்தையும் டெல்லி மதிக்கவில்லையென்றுதான் நாம் கருதவேண்டியிருக்கிறது.

திருமதி இந்திரா காந்தி இன்று உயிருடன் இருந்திருந்தால் இவ்வளவு ஆணவத்துடன் ஜெயவர்த்தன பேசுவாரா, ஊரைக் கூட்டுவாரா? இவ்வளவு துணிச்சலாகப் பாகிஸ்தானும், இஸ்ரேலும், அமெரிக்காவும் இந்திய எல்லைப்புறத்தில் நடமாடுமா? இந்த எதிரிகளின் தரத்தை ராஜீவ் ஆழமாகக் கவனிக்க வேண்டும்.

இந்திய அரசு விடுதலைப் புலிகளை தமது கையில் பிடித்து ஒப்படைக்க வேண்டும் என்கிறார் ஜெயவர்த்தன, அதன்பின்தான தமிழர் பிரச்னைக்கு வழி செய்வாராம். எந்தத் தைரியத்தில் இவர் இப்படிப் பேசுகிறார், என்பதை யோசித்துப் பாருங்கள். யார் கொடுக்கும் தைரியம்? இலங்கையின் தலைவருடன் நியாய வாதங்களை உபயோகிப்பதில் அர்த்தமில்லை. இவரின் தரம், அவருக்கே உரியபாணியில் அமைந்துள்ளது; இத்தலைவருக்குப் புரிகின்ற மொழியில் பதில் கொடுக்க வேண்டும், — இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை ஜெயவர்த்தன இன்று ஆழம் பார்ப்பதைபபோல, 42 வயது கொண்ட இளம் கென்னடியை அமெரிக்க ஜனாதிபதியை, அன்று ரஷ்ய நாட்டுத் தலைவர் குருஷ்சேவ் 1962 இல ஆழம் பார்த்தார், கென்னடி என்ன செய்தார் தெரியுமா?

— சிந்தியுங்கள்.

## பாலர் நேசன்

— சிறுவர் மலர் —

அன்பான பிள்ளைகளே!

உங்களுக்காக இப்பகுதியைத் தொடங்கி இருக்கிறோம். சிறு கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எழுதுங்கள், தகுதியானவற்றை இப்பகுதியில் வெளியிடுவோம்; எழுதுங்கள்!

அன்புள்ள
பாலர் மாமா

எங்கள் முகவரி:
பாலர் மாமா,
C/o. குருமனை,
மானிப்பாய்.

### சிந்தியுங்கள்!

ஆகாயத்துப் பறவைகள் போலப் பறப்பது எளிது. ஆனால், பூமியிலே மனிதனாய் வாழ்வது மிகக் கடினம்.

### சிறுகதை:

### பொறுமையுள்ள மேரி

( க. நல்லருளானந்தம் )

மேரியும் இந்துமதியும் இணைபிரியாத சினேகிதிகள்; இருவரும் அடுத்தடுத்த வீட்டில் வசிப்பவர்கள். பாடசாலையிலும் வகுப்புத் தோழிகள், மேரி வறுமையில் வாடுபவள். இந்துமதியோ பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கும் பணக்காரி. இந்துமதியைத் தொடர்ந்து நிழல் போல் திரிவாள் மேரி. இந்துமதியும் அப்படியென்றே சொல்லலாம. இருவரையும் 'இணைபிரியாத அன்பரானிகள்' என்றே ஆசிரியர்களும், மாணவர்களும் கேலி பண்ணுவார்கள்,

பாடசாலை முடிந்ததும் விரைவாக வீட்டிற்கு ஓடி வருவார்கள். மாலையில் மணவீடு கட்டி, சோறு கறி சமைத்து விளையாடுவார்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது, வெய்யில் பசி, பட்டினிகூட இவர்களுக்குத் தெரியாது. இந்துமதியின் வளவு தான இவர்களின் விளையாட்டு மைதானம். பாடசாலையிலும் விளையாட்டிலும் பொறுமையற்றவள் இந்துமதி. இவளின் பொறுமையற்ற செயல்களால் ஆசிரியரே சில வேளைகளில் தம் பொறுமையை இழந்துவிடுவார்.

மேரி ஆக்குவதை இவள் அழிப்பாள். நிலைத்திருக்கும் இயல்பு இவளிடம் எள்ளளவுமில்லை. இவளுக்கு அக்கரைக்கு இக்கரை பச்சை, வெள்ளாடு போல் திரிவாள். மேரியோ பொறுமையும் சாந்தமும் திரண்டு உருவெடுத்தாற் போன்றவள்.

ஒரு நாள் மாலை, இவ்விருவரும் மலையோரத்தில் மண்வீடு கட்டி விளையாடினர். விளையாட்டாக கட்டிய வீடு, கடவுளுடைய வீடுபோல் காட்சியளித்தது. மேரியின் மனத்தில் தான் செல்லும் தேவாலயத்தின் நினைவு வந்தது. செபிக்க வேண்டுமென்ற எண்ணம் அவள் உள்ளத்தில் உதித்தது. அக்கணமே அமர்ந்திருந்து செபித்தாள். இதைக் கண்ட இந்துமதி கோபங்கொண்டாள். இருவரும் சேர்ந்து கட்டிய வீட்டைக் குலைத்துவிட்டாள். மேரி தொடர்ந்து செபித்துக் கொண்டிருந்தாள். மேரிக்காகக் காத்திருக்க விரும்பாத இந்துமதி தன வீட்டிற்குப் புறப்பட்டாள்,

மேரியோ, சாந்தமாகத் தன்னைக் கர்த்தருக்கு ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டாள். கொஞ்சத்தூரம் போகவே தன் சினேகிதி மேரியின் உடையின் துண்டுகளும், வழிநெடுக இரத்தமும் சிந்தியிருக்கக் கண்டாள். இதனைக் கண்டு அழத் தொடங்கினாள். இன்னும் சிறிது தூரம் சென்றதும் இந்துமதியின் உடலின் ஒரு பகுதி கிடக்கக் கண்டாள், தன் சினேகிதியின் பொறுமையற்ற குணத்தால் ஏற்பட்ட விபத்தை நினைந்து மனம் வருந்தினாள், அலறினாள். கடவுள் தன்னைக் காட்டு மிருகத்தின் வாயிலிருந்து தப்புவித்ததற்காக, எல்லாம வல்ல கடவுளுக்கு நன்றி செலுத்தினாள்.

பிள்ளைகளே, 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பது பழமொழி. பொறுமையாயிருக்கப் பழகிகொள்ளுங்கள். என்ன துன்பம் நேர்ந்தாலும் அந்தரப்படாதீர்கள். "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறியுங்கள்" என்பது கடவுளின் வாக்கு.

### அடுத்த வாரம்-எதிர்பாருங்கள்

★ பாவ மரம் ★

என்ற பாடல்

பாவமென்றால் அது என்ன?
பாலர் நீங்கள் கூறுங்கள்?

### பதினைந்து வயதுடைய பையன் பிரான்ஸ் மந்திரியின் ஆலோசகர்!

பதினைந்து வயதான, கிறில்லெட விக்னெ மொன்ட் என்ற பெயருடைய மாணவன், கணிதத்திலும், கம்பியூட்டர் விஞ்ஞானத்திலும் மிக்கத திறமைபெற்றவன். இவன் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவன். இந்நாட்டின் சிவில் சேவை திட்டமிடல் அமைச்சின் ஆலோசகனாக, இம்மாணவன் நியமிக்கப் பட்டிருக்கிறான். இன்னும் பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறான். வாரத்தில் இருநாட்கள் பாரிசுக்கு வந்து அமைச்சருக்கு ஆலோசனை வழங்குகிறான்.

இவன் தனது 12ஆம் வயதிலேயே அமெரிக்க கம்பியூட்டர் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தமொன்று தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தி பலதிட்டங்களை உருவாக்கியவன். கடந்த டிசம்பர் மாதம் பிரஞ்சுத்தலைவர் மிட்டராண்ட்டுடன் தொலைக்காட்சியில் தோன்றி அவரது கொள்கைகள் குறித்துப் பல கேள்விகளை விடுத்தான்,

மணி வாக்கு

"இறைவன்மேல் நம்பிக்கைவைத்து, இறைவனைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனிதன், நற்பேறுபெற்றவன்"

— எரேமியா. 17 : 7.

உதயதாரகை

# அமைதி நிலவ வேண்டும்

இன்று நமது நாட்டில் அவசியமாகத் தேவைப்படுவது அமைதியே. இதனை நமது அரசாங்கத் தலைவர்கள், இன்னும் உணராதிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது; எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல், தொடர்ந்து அமைதியைக் கெடுக்கும் வன் செயல்களைத் தூண்டி வருகிருர்கள். ஒரு புறம் புத்த தர்மத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு, மறுபுறம் தமிழ் இனத்தையே அழிக்கத் திட்டமிட்டுச் செயல் புரிந்து வருவதைக் காண்பது பெருங்கவலையை அளிக்கிறது.

பயங்கரவாதிகளை அகற்றுகிருேம் எனக் கூறிக் கொண்டு, ஒன்றுமறியா அப்பாவித் தமிழ் மக்களை மிருகத்தனமாகக் கொலைசெய்து வருவதால், நாட்டில் அமைதியை நிலவச் செய்யலாமென எண்ணுகிருர்கள் போலும்! நாட்டிலுள்ள ஒரு இனத்தை அடக்கி ஒடுக்குவதால், நாட்டில் அமைதி ஏற்படச் செய்யலாமென நினைப்பது தவறு.

இந்த உண்மையை இந்தியா பல முறைகளில் எடுத்துக் கூறியிருக்கிறது. சிங்கள மக்களுள் பலர் இதனைக் கூறியிருக்கின்றனர். 'சட்டர்டே றிவ்யூ' ஆசிரியர் திரு. காமினி நவரத்தினவும் இதனைத் தமது பத்திரிகையில் அடிக்கடி வலியுறுத்தி வருகிருர், இவையாவும் செவிடன் காதில் சங்கு ஊதிய கதையாகவே முடிந்திருக்கிறது.

இந்தக் கட்டத்தில் நமக்கு நம்பிக்கையூட்டும் வேருெரு குரல், அமைச்சர் அவையிலிருந்து எழுப்பப்பட்டுள்ளது; ஆம், அது தான் பிரதி நிதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜாவின் குரல். இவர் இன்றைய பிரச்சனை பற்றி தயங்காமல், தனக்குச் சரியென்று படுவதை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகக் கூறிவரும் நிதான சுபாபமுடையவர். தமிழர் பிரச்சனையைப்பற்றி, ஏனைய அமைச்சர்களைவிட வேறுபட்ட கருத்துள்ளவர். தமிழ் மக்களின் பிரச்சனையை நீதியாகவும் நியாயமாகவும் தீர்க்க வேண்டுமென, அடிக்கடி நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி வருகிருர்.

சமீபத்தில் கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. ரணராஜா, தமிழர் பிரச்சனை பற்றி விளக்கமாக தமது கருத்தை வெளியிட்டிருக்கிருர். இவரின் நேர்மையான போக்கை தமிழ் மக்கள் நிச்சயமாக வரவேற்பார்கள். — "தமிழர்கள் தங்கள் உரிமைகளை ஜனநாயக வழியில் பெற முயன்று தோல்வி கண்டதனுல், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிருர்கள். முன்னர் செய்யப்பட்ட பண்டா — செல்வா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருப்பின் இனப்பிரச்சனையே எழுந்திராது. தமிழர்கள் பல துறைகளில் புறக்கணிக்கப் பட்டதனுல் தான், மனம் நொந்து சிங்கள மக்கள் மீது நம்பிக்கை இழந்திருக்கின்றனர். ஆகவே, சிங்களவரைத் தமிழ் மக்கள் நம்ப வேண்டுமென்று மட்டும் கூறிக் கொண்டிராமல், தமிழ் மக்களைச் சிங்கள மக்களும் நம்பி நடக்க வேண்டும்" — எனத் திரு. ரணராஜா கூறியதை நாம் வரவேற்கிருேம்.

இந்த உண்மையை ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள தலைவர்கள் உணரவேண்டும் பௌத்த பிக்குகள் உணரவேண்டும். படித்த சிங்கள அறிஞர்கள் உணரவேண்டும். சிங்கள பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ சபைகள் உணரவேண்டும். திரு. ரணராஜாவைப் போல், சிங்களத் தலைவர்களில் சிலராவது உணர்ந்தால், கூடிய விரைவில் இந்த நல்லெண்ணம் பலரிடம் பரவி நாட்டில் நல்ல மாறுதலை ஏற்படுத்த ஏதுவாகும். நாம் நாடும் அமைதி நிலவும்.

செய்தி

## திருவழிபாடு பற்றிய பணிக்களம்

கிறிஸ்தவ வழிபாட்டைப்பற்றிய பணிக்களம் ஒன்று, கண்ணகம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில், கடந்த 28 ஆம் நாள் தொடங்கி 26ஆம் நாள் வரை நடைபெற்றது. இப்பணிக்களத்தை, பொதுநிலையினர் நற்தூதுப்பணிக் கழகமன்றத்தின் பதிவாளர் அருள்திரு. T.S பிரேமராசா ஒழுங்கு செய்தார். பேராசிரியர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் திருவழிபாட்டைப் பற்றி 12 விரிவுரைகளை வழங்கினர். ஏறக்குறைய 35 பேர் இப்பணிக்களத்தில் கலந்து கொண்டனர். அருள்திரு. சாம் ஆல்பிரட் அருள்திரு. டி. ஜே. அம்பலவாணர், அருள்திரு பிரேமராசா ஆகியோர் இப்பணிக்களத்தை நடத்துவதில் உதவியாயிருந்தனர்.

சொல்லும் பொருளும்

## "நற்செய்தி" என்பதின் விளக்கம்

Euaggelion என்ற கிரேக்க சொல் 'சுவிசேஷம்" அல்லது 'நற்செய்தி' எனப் பொருள்படும். இச்சொல், கிறிஸ்தவக் கொள்கையின் உட்பொருளுக்கும் நம்மைக் கொண்டுவருகிறது.

இஃது புதிய ஏற்பாட்டிற்கே தனியுரிமையான செயல். புறம்பே இச்சொல்லுக்கு நீண்ட வரலாறு இருந்ததில்லை. கிரேக்க இலக்கியத்தில், தொடக்கத்தில் இதற்கு 'நற்செய்திக்காக அளிக்கப்படும் பரிசு' என்றபொருள் இருந்தது.

பழைய ஏற்பாட்டில், Euaggelion என்னும் பெயர்ச் சொல் இல்லாவிடினும், Euaggelizesthai என்னும் வினையுருவம் காணப்படுகிறது. இங்கு அது 'சுவிசேஷம்' என்னும் சொல்லின் புதிய ஏற்பாட்டுப் பாவிப்பிற்கு, முன்சுவை அளிப்பதாய் வருகிறது. சங்கீதங்களில் வினைச்சொல், கடவுளின் நீதியையும் இரட்சிப்பையும் எடுத்துரைப்பதைக்குறிப்பிட வழங்கப் பட்டிருக்கிறது (சங். 40 : 10 ; 96 2.). ஆனல், குறிப்பாக ஏசாயாவில் கடவுளால் அபிஷேகம் பண்ணப் பட்டவரின் வருகையைப் பற்றிய நற்செய்தியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிருேம (ஏசா. 40 : 9 ; 52 : 7; 61 : 1).

Euaggelion என்னும் சொல்லின் புதிய ஏற்பாட்டு வழக்கு, 'நற்செய்தியைப் பிரசங்கிப்பது' எனப் பொருள்படும். Euaggelizesthai எனும் வினைச் சொல்லின செப்துவஜிந்த (ப.ஏ. இன் கிரேக்க மொழியாக்கம்) பாவிப்பிலிருந்து கருத்து ஏற்கிறது கிறிஸ்துவ பழைய ஏற்பாட்டு வேதவாக்கின் நிறைவேறுதல் என்னும் நம்பிக்கைக்கு அது சாட்சியாய்த் திகழ்கிறது,

இவற்றில் முக்கியமான ப.ஏ. வாக்கியம் ஏசா. 61 : 1. நாசரேத்தில் செய்த பிரசங்கத்தில் (லூ. 4 : 18) இக் கூற்றுகள் தம்மைக் குறிப்பவையென இயேசு வெளிப்படையாகக் காண்பிக்கிருர். வேறு இடங்களிலும், தாம தரித்திரருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பது, ப.ஏ. வேதவாக்கின் நிறைவேற்றுதல எனக் குறிப்பிடுகிருர் (மத். 11 : 5). மேசியாவைப் பற்றிய இறைவாக்குகளின் நிறைவேறுதலாகத் தமது அருளுரைக்கு Euaggelizesthai (நற்செய்தியை அறிவித்தல்) என்னும் சொல்லை முதன் முதல் வழங்கியவர் இயேசுவே.

சகல இனத்தாரும் அவனுக்குள் ஆசீர் வதிக்கப்படுமென்று ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் (ரோ, 4 : 13; கலா. 3 15 முதல்) முன்னறிவிக்கப்பட்ட நற்செய்தி (Pro-euaggelion) என்று பவுல் கலா, 3 : 8 இல் உறுதியாகக் கூறுகிருர். ஆபிரகாமின் சந்ததியாகிய இயேசு கிறிஸ்துவில் புறசாதியாருக்கு அவ்வாசீர்வாதம் வந்தது. வாக்குறுதி நிறைவேறிற்று. கடவுள் புறஜாதியாரை விசுவாசத்தினுல் நீதிமான்களாக்குவார் என்னும் வாக்குறுதி ஓர் உண்மையாயிற்று. 'முன்னிற்கும நற் செய்தியாய்' இருந்தது எதுவோ அது இப்பொழுது நற்செய்தியாகிவிட்டது (ரோ 1 : 1 மு ; 1 கொ. 15 : 1; ரோ. 16 25 மு.)

Euaggelion என்னுஞ் சொல் புதிய ஏற்பாட்டில் மாத்திரம் காண்பிக்கப்படுகிற தெனினும். நற்செய்தி புதியதொரு போதனை அல்ல. ப.ஏ. இல் நற்செய்தியாய் வாக்குறுதியளிக்கப் பட்டிருந்தது இப்பொழுது நிறைவேறியிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்டிருந்தது, வரலாற்றில் கடவுள் செய்திருக்கும், இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் நிறைவேறியருக்கிறது. (மத். 1 : 22 மு ; கலா, 4 : 4 முதலியன)

(வளரும்)

செய்திகள்

## இந்தியாவிலிருந்து கிறிஸ்தவ குருமார் வெளியேற்றம்

கத்தோலிக்கத் திருச்சபையின் திருத்தந்தை 6 ஆம் பவுல் அவர்கள் இந்தியாவைச் சந்தித்த பின், அடுத்தடுத்துச் சில வெளிநாட்டுக் கத்தோலிக்கக் குருவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேற்றப் படுகின்றனர். கடந்த பெரிய வியாழனன்று, கனடாவைச் சேர்ந்த ஒரு குரவர், ஒரு வாரத்திற்குள் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டுமெனப் பணிக்கப்பட்டார். இவர் 66 வயதுடையவர். 18 ஆண்டுகள் தமது வாழ்வை இந்திய மக்களுக்காக அர்ப்பணித்தவர்.

கடந்த மாசி மாதத்தில் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த குருவுக்கு, இந்தியாவை விட்டு வெளியேற மூன்று வார அவகாசம் கொடுக்கப்பட்டது. திருத்தந்தை இந்தியாவைச் சந்தித்த ஒரு வாரத்தின் பின் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்று திரும்பிய ஜேர்மன் நாட்டுக்குரவர் ஒருவர், விமான நிலையத்திலிருந்தே திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும், பல தலைவர்களின் அநியாயங்களையும் கண்டிக்க குருக்கள் இன்று பின்வாங்குவதில்லை.

— [ தகவல் : பாதுகாவலன் ].

## மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நூலகம்!

கி. மு. 10 ஆம் நூற்றுண்டில் நிறுவப்பட்ட நூலகமொன்று, ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு அருகில் புதைபொருள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலகில் மிகவும் புராதன நூலகங்களில் ஒன்ருக இது கருதப்படுகிறது.

## ஐக்கிய இறையியல் கழகம்

தென் இந்திய திருச்சபை, யாழ். மறையாவட்டத்தின் ஐக்கிய இறையியல் கழகத்தின் 2ஆம் ஆண்டிற்கரிய வகுப்புக்கள் மே மாதம் 2 ஆம் திகதி தொடங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் புதிதாக 8 பேர் இறையியல் மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிந்தனைக்கு

- 'மனிதர்களாகப் பிறந்து விட்டால் மட்டும் போதாது. மனிதர்களாக வாழ வேண்டும்'
- 'மனிதனை அவனது செயல்களிலிருந்து தான் மதிப்பிடுகிருர்கள்; வார்த்தைகளினுல் அன்று'

— பாதுகாவலன்

EDITORIAL

## Fixing the Problem

"Down the street is a century-old temple, a minute's walk and the present becomes the past." These are the words with which a travel brochure of Sri Lanka which we have on our shelf, introduces to the Sri Lankan tourists the antiquity of the country's civilisation and culture with a large coloured picture of a tourist-officer dressed flamboyantly in batik, fondly describing a hoary Buddhist temple seen in the background, partially hidden amidst the protruding foliage. Patriotism and religion are closely entwined in Sri Lanka.

The *Selvasannithy* Temple at Thondaimanaru (in the Pt. Pedro Electorate) is a Hindu Temple, sacred to the Tamil people. It is a place "*Where the present becomes the past.*"

It has remained over the years as an epitome in Jaffna of a Tamil culture which considers the act of obeisance to *life* (in the form of meeting the needy of their greatest need, a daily meal of rice) as an act which is in essence religious. The cheerful obliviousness with which this need is met, in the numerous madams at Selvasannithy is a replica of this culture.

A new level of ferocity in the three year old civil war was reached on Monday (21-4-86) when as a sequel to a direct confrontation between the Tamil resistance forces and the Government security forces, the eight wheeled, 40-foot chariot, estimated at 4.5 million rupees was reportedly reduced to ashes with only its 'shelter' partly intact

But what has irked the Tamil people more than the ravishment of a sacred Hindu shrine, was the picture of the scene, which was projected subsequently on the screen of Sri Lanka's TV, the *Rupavahini*. Prof. K. Sivathamby, a member of the fact-finding mission (led by the G. A., Jaffna) which visited the site on 23-4-86, has addressed a letter to the G A. (as reported in the *Eelamurasu* of 26-4-86) making an appeal to him to let the country and the world know the *truth*.

What has been left out of the TV screen, according to the Professor was the mound of ashes which was all that was left of the chariot, the human skull and skeletion which the fact-finding team inspected at the site and the damaged sacred buildings, associated with the Temple. According to reports, three were killed during the reprisal one of which was the priest-in-charge.

The most palpable feeling among the people of the area most of whom have left their hearths and homes for safer havens, is that it would *not* be possible for the Selvasannithy Temple to resume its normal rites and festivals unless and until the army camp is removed from Thondaimanaru. The fact-finding team which visited the Temple site has found the area surrounding the Temple resembling a crematorium. The 'spark' at Thondamanaru is likely to lit a Prairie fire unless meaningful steps are taken.

Begining with the killing of Father Mary Bastian at *Vankalai* in the Mannar District on 6-1-85, the most tragic aspect of Sri Lanka's political palsies has been the veil of secrecy and mystery which has shrouded almost every 'incident' which marked a new level of barbarity in the country's fretful struggle, even when the government had ordered a full scale investigation into such incidents. "The cruellest lies" said R. L. Stevenson "are often told in silence."

In the meanwhile, events in recent weeks in Sri Lanka, have followed a dizzying trial While fighter planes were raining bombs on the Selvasannithy Temple in the Northern Province, rescue teams from the army, the navy and air-force had to be despatched posthaste to Kantalai in the Eastern Province where some 125 people have been reported dead 2500 missing and some 18,000 rendered homeless following a breach of the Kantala-Wewa bund in the Trincomalee District.

A correspondent in a foreign journal with pungent sarcasm said, during the Cape Canaveral Air Disaster in U. S. in January this year, that the whole Tory Party in Britain was relieved that the explosion over the cape wiped "Westlandgate" off the front pages of the British Press.

We do not say that the Kantalai tragedy with its heavy toll of life served only to wipe the Selvasannithy tragedy off the front pages of the national media. But what has struck us as unfortunate is that deaths in Sri Lanka following natural calamities or disasters caused by months of complaceny and negligence, catch headlines and trigger strong editorial comments in our national media than deaths caused by unmitigated boorishness in the country. Victims of these acts die unhonoured and unsung. No one raises a voice on their behalf.

We are not in a position now to comment on the news that a new militant group had claimed to have caused the 'breach' or on the reported comment at Ministerial level that if it was so, it was unfortunate that many Tamils died.

The bomb explosion at the Ceylon Petroleum Corporation's bulk depot at Anuradhapura on 23-4-86 in which nine people died (five Tamils and four Sinhalese) again underscores the searing problems which the country as a whole is facing.

More important than fixing the *blame* on anyone for the almost full blown national crisis in which we find ourselves today is fixing the *problem*. As we write these notes, we have news of a team from India which is due in Sri lanka on Tuesday (29-4-86), to pursue the matter of finding a basis for a political solution from the *new proposals* which the Government of Sri Lanka sent recently to India through Foreign Minister Hameed. [Mr. P. Sithambaram, M. A, heads the delegation.]

But even before the team has set foot on our soil, an editorial in the *Sunday Observer* of 27-4-86 has struck, what we believe to be a discordant note. Peace reconciliation, national harmony cannot be forged in an iron fist campaign.

In a leading article under the caption "India must act now", *the* "*Sunday Observer*" makes no reference to any other members of the Indian Team, other than Mr. Romesh Bhandari who is described not as a diplomatic peace-maker but as diplomatic 'trouble shooter'. [Shooting at troubles may at times intensify them.] The thrust of the article is that the terrorist operating on Indian soil (some of whom have made statements in India about their involvement in 'terrorist' activities recently in Sri Lanka) should be wiped away first, before India could help Colombo to arrive at a political solution. The point made by the *Sunday Observer* echoes correctly the government position in Sri Lanka.

But we wonder if the 'Tamil Problem' at this stage of our annals can be 'fixed', without our having a very clear picture of our new imperatives.

Two journalists who followed very closely the Middle East 'terrorists' in their trial for two months have this picture of them impressed in their minds:—

> "Terrorists are not born. They are made. Libya may provide most of the funds, Syria most of the guns, Lebanon, many of the recruits. But it is the Palestinian cause and the lack of a homeland and the moribund peace process that provieds the motive for driving them outside the pale of civilised conduct."

---

*Appreciation*

**The Late Dr. Mrs. Emily Pakkiam Retnanandam**

"Is life worth living?" asked somebody, and the reply was, "It depends on the liver." Let us dispense with the pun usually associated with this.

Dr. Mrs. Retnanandam had not only lived a life worthy of its name, but also had made an indelible impression on the society in wich she lived.

To see a lady Medical Officer 50 years ago was a rare phenomenon. It is no surprise that the conservative women of Jaffna of those days had an aversion for male medical officers, and no doubt Dr. Mrs. Retnanandam's service had been a boon to the women of Jaffna.

Imbibed with all that is best of a Christian background, and imbued with a pleasant smile, serenity, simplicity and sufferance, the essential ingredients of a good Doctor, Mrs. Retnanandam was a Medical Officer par excellence. Mrs. Pakkim Retnanandam was the youngest daughter of Rev. Spaulding Chellappah Solomon of Navaly. She was educated at Vembadi Girls' High School, Jaffna, where she was Head Girl during the last two years of her school career. From Vembadi she proceeded to the Vellore Medical College for her higher studies. Incidentally, she was the second girl from Vembadi to be selected for medicine during her time, she was also President of the Old Girls' Association of Vembadi for two years.

Having passed out as a Doctor she served the Inuvil and Puttur Hospitals. At the Inuvil Hospital (Mcleod Hospital) she had the good fortune of working under Dr. Kennedy, a relative of the late John. F. Kennedy. President of America. Although she went to the United Kingdom with her husband in 1983 to live with their son, the love of her old Institution, namely the Mcleod Hospital, Inuvil, saw her back in Sri Lanka soon and she went to live at the same old Mcleod Hospital which she had once served, and breathed her last at this hospital itself.

She leaves behind her husband Mr. J. K Retnanandam, a retired Assistant Transportation Superintendent of the Railway and a well known free lance writer and ardent social worker, three sons and a daughter.

May her services be remembered.

— N. Satchchithananthan.

---

**Mrs. S. T. Aiyathurai**

(*Continued from page 1*)

Mrs. Aiyathurai loved her Lord and bore everything even her illness with faith, strong will power and miraculous patience.

Her favourite hymn "Have thine own way Lord" was rendered as a special item at the Service.

May God grant her eternal rest and peace in His presence.

— Ruby Appadurai.

---

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/96/News/86.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 2nd May 1986 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.